

கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் வட்டம், பூட்டை கிராமத்தில் பெற்றோர் இருவரையும் இழந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு குழந்தைகளை தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர், திராவிட மாடல் நாயகர், சமூக நீதிக் காவலர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவிற்கிணங்க, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேரில் சந்தித்து ஆறுதல் கூறி, நிதியுதவி வழங்கி, அக்குழந்தைகளின் கோரிக்கைகளை முழுமையாக நிறைவேற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார், உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த், சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன், கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் ஆகியோர் உள்ளார்கள்.

### ‘தமிழ்கேள்வி’ தி. செந்தில்வேல் எழுதிய

# திராவிடம் 2.0 ஏன்? எதற்கு? நூல்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வெளியிட்டு சிறப்புரை!

சென்னை, நவ. 19-

சீதை பதிப்பகம் மற்றும் ‘தமிழ்கேள்வி’ வழங்கும் - தமிழ் கேள்வி தி. செந்தில்வேல் எழுதிய திராவிடம் 2.0 ஏன்? எதற்கு நூல் வெளியீட்டு விழா நாளை (20.11.2025-வியாழன்) மாலை 5 மணியளவில் தியாகராயர் நகர், சர்.பிட்டி தியாகராயர் அரங்கத்தில் நடைபெறுகிறது.

இந்நூல் வெளியீட்டு விழாவில் சீதை பதிப்பகம் கௌரா ராஜசேகரன் வரவேற்புரையாற்றுகிறார்.

சென்னை தென்மேற்கு மாவட்டச் செயலாளர் மயிலை த. வேலு எம்.எல்.ஏ., ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., ராஜா அன்பழகன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நூலை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டு சிறப்புரை யாற்றுகிறார்.

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நூலை பெற்றுக் கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

இவ்விழாவில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கு. செல்வப்பெருந்தகை எம்.எல்.ஏ. வாழ்த்துரை வழங்குகிறார்.

தமிழ்கேள்வி தி.செந்தில்வேல் ஏற்புரை யாற்றுகிறார்.

கௌரா ஜெய் கணேஷ் நன்றி கூறுகிறார். திவ்யா நாதன் இணைப்புரை வழங்குகிறார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# “அன்னம் தரும் அமுதகரம்” 272 வது நாள்!

## எழும்பூர் வடக்குப் பகுதியில் உணவு வழங்கப்பட்டது!

சென்னை,நவ.19-

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 272 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (18.11.2025), எழும்பூர்



வடக்கு பகுதி: 1) வட்டம் 99, பிரிக்லின் ரோடு, திடீர் நகர் சந்திப்பு. 2) வட்டம் 99 அ, புல்லாபுரம், கீழ்ப்பாக்கம், வட்ட செயலாளர் சி .சேகர் சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்களின் வழிகாட்டுதல் படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மேயர் பிரியா ராஜன், சொ.வேலு, வி.சுதாகர், பி.எம்.யாழினி, கோ. ஏகப்பன், கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, கே.எஸ்.எம்.நாதன், புனிதவதி எத்திராசன், கோ.மணி, நிர்மலாதேவி. மாமன்ற உறுப்பினர்கள்: B.சுமதி, ராஜேஸ்வரி ஸ்ரீதர், பரிதிஇளம்சுருதி, ஜி.தாமோதரன், எழும்பூர் வடக்கு தெற்கு பகுதி செயலாளர்கள்: வி. அபாய், தி.தயாளன், சு. மனோகர், ந.பாலு, ஆர். எம்.ரங்கநாதன், சி.சேகர், வி.விஜயகுமார், ஆர்.பாபு, டால்வின் எஸ்.அரிகிருஷ்ணன், இ.மொய்தீன், வான்மதி கதிரவன், எல். சுந்தர்ராஜன். இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: S.முரளி, R.ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்குமார், L.சம்பத்குமார், க.பா. பிரதீப்குமார், மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருத்தணி வடக்கு ஒன்றிய இளைஞரணி சார்பில் கிளை இளைஞரணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பாக இளைஞரணி அமைப்பாளர்கள் நேர்காணல் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் எம்.எல்.ஏ தலைமையில் ஒன்றிய செயலாளர் ஏ.எல்.விஜயகுமார் ஏற்பாட்டில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ம.கிரண் முன்னிலையில் மாநில இளைஞரணி துணைச் செயலாளர் ஜி.பி.ராஜா நேர்காணல் நடத்தினார். அருகில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் விஜயகுமார், ஆர்.இராஜா உள்பட கழக நிர்வாகிகள் இளைஞரணி நிர்வாகிகள் உள்ளனர்.



கும்மிடிப்பூண்டியில் சிப்காட் தொழிற்பேட்டையில் இருந்து வரும் கழிவுநீர் கும்மிடிப்பூண்டி பஜார் பகுதியில் உள்ள தாமரை குளத்தில் கலப்பதால் நீர் மாசுபாடு நிலத்தடி நீர் பாதிப்பு மற்றும் சுற்றுச்சூழல் சீர்கேடு போன்ற கடுமையான பிரச்சனைகள் கும்மிடிப்பூண்டி வாழ் பொதுமக்களுக்கு எற்படுவதால் சிப்காட் திட்ட அலுவலர், கும்மிடிப்பூண்டி பேரூராட்சி செயல் அலுவலர், பொதுபணித்துறை அதிகாரிகளிடம் நடைபெற்று வரும் பணிகள் குறித்து நேரில் ஆய்வு மேற்கொண்டு உடனடித் தீர்வு காணுமாறு டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. கேட்டுக்கொண்டார். உடன் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



கூடலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கூடலூர் நகராட்சி சார்பில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பாக ஏழு முறை பாடி பழங்குடியினர் கிராமத்தில் 20 லட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்ட புதிய அங்கன்வாடி கட்டிடத்தை நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சியர் லட்சுமி பவ்யா தண்ணி ரூ, மாவட்ட கழக செயலாளர் கே.எம்.ராஜு, மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் மற்றும் கூடலூர் சட்டமன்றத் தொகுதி தேர்தல் பொறுப்பாளர் ஆர்.பரமேஷ் குமார், மாவட்ட அவை தலைவர் போஜன், மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார், நகர கழக செயலாளர் இளஞ்செழியன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திராவிட மணி உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்,

### நடப்பு சம்பா பருவத்தில்

# நெல் கொள்முதலுக்குத் தேவையான முன்னேற்பாடுகள்!

## அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில் கலந்தாய்வுக் கூட்டம்!

சென்னை, நவ.19-

நடப்பு சம்பா பருவத்தில் நெல் கொள்முதலுக்குத் தேவையான முன்னேற்பாடு நடவடிக்கைகள் குறித்து உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில் வேளாண்மை - உழவர் நலத்துறை, உணவுப் பொருள் வழங்கல் துறை அலுவலர்களுடன் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது.



தமிழ்நாட்டில் 2024-25 நெல் கொள்முதல் பருவத்தில் இதுவரை இல்லாத வகையில் 47.99 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் மேற்கொள்ளப்பட்டு வரலாற்றுச் சாதனை படைக்கப்பட்டுள்ளது. நடப்பு 2025-26 கொள்முதல் பருவத்தில் டெல்டா மற்றும் டெல்டா அல்லாத மாவட்டங்களில் இதுவரை 14.18 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

வேளாண்மைத் துறையினரால் வழங்கப்பட்ட புள்ளிவிவரங்களின் அடிப்படையில், 2025-26 ஆண்டில் நெல் சாகுபடி பரப்பு கடந்த ஆண்டை விட கணிசமான உயர்வைப் பெற்றுள்ளதாலும், நெல் விளைச்சலும் அதிகமாக உள்ளதாலும் இந்தாண்டு நெல் மகசூல் வரலாற்றுச் சாதனையை எட்டக்கூடும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

தடையின்றி நெல் கொள்முதல் செயல்பாடுகளுக்கு தேவையான சாக்கு , சணல் , தார்ப்பாலின் பாய்கள், ஈரப்பதமானி, மின்னணு தராசு, தரச் சோதனைக் கருவிகள், நெல் தூற்றும் இயந்திரங்கள், சவுக்கு கட்டைகள், வெட்டுக்கற்கள் உள்ளிட்ட அனைத்து உபகரணங்களையும் போதுமான அளவில் இருப்பில் வைத்திருக்கவும் மாவட்ட அலுவலர்களுக்கு தெளிவான அறிவுறுத்தல்கள் வழங்குமாறு அமைச்சர் அர.சக்கரபாணி அவர்கள் அறிவுறுத்தினார்.

இந்த ஆண்டு அதிகமான அளவில் நெல்கொள்முதல் எதிர்பார்க்கப்படுவதால், 4.03 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட மேற்கூரையிட்ட நவீன நெல் சேமிப்புத் தளங்கள் பயன்பாட்டில் இருந்தாலும், மாவட்ட வாரியாக கிடங்கு வசதிகளை மதிப்பாய்வு செய்து, புதிய தற்காலிகக் திறந்தவெளி கிடங்குகளை அமைக்கும் பணிகளைப் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டது. மேலும், அரசின் பயன்பாட்டிலில்லாத கட்டிடங்கள் மற்றும் பிற துறைகளின் கிடங்குகளையும் தற்காலிகச் சேமிப்பிற்கு பயன்படுத்தும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்திடவும் அறிவுறுத்தப்பட்டது.

விவசாயிகளிடமிருந்து நெல்லினை எவ்வித காலதாமதம் இன்றி கொள்முதல் நிலையங்களில் உடனடியாக கொள்முதல் செய்திட கூடுதல் திட்டம் வகுத்திடவும், நெல் கொள்முதல் நிலையங்கள் வாரியாக விவசாயிகள் கூட்டம் நடத்திடவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

மேலும், எதிர்வரும் பருவ மழைக்காலத்தை முன்னிட்டு, கொள்முதல் செய்யப்பட்ட நெல்லை அரவை ஆலைகளுக்கும், சேமிப்பு கிடங்குகளுக்கும் தாமதமின்றி நகர்வு செய்திடவும், திறந்தவெளி சேமிப்பு நிலையங்களில் சேமிக்கப்பட்டுள்ள நெல்லினை மிகவும் பாதுகாப்பாக வைத்திடவும், இவற்றை கண்காணித்திட மண்டல அளவில் மேற்பார்வை அலுவலர்கள் நியமித்திடவும், மாவட்ட அளவில் கொள்முதல் செயல்பாடுகளை ஒருங்கிணைக்க, மாவட்ட ஆட்சியர்களுடன் இணைந்து ஒருங்கிணைப்புக் குழுவை அமைத்து செயல்படவும் அமைச்சர் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, தமிழ்நாடு வேளாண் விளைப்பொருள் விற்பனை வாரிய ஆணையர் த.ஆபிரகாம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக நிர்வாக இயக்குநர் முனைவர் ஆ. அண்ணாதுரை, வேளாண்மை இயக்குநர் பா.முருகேஷ், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை இயக்குநர் சு.சிவராசு, தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவன இயக்குநர் முனைவர். ஜெ.விஜயாராணி, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசு துணைச் செயலாளர் பனோத் ம்ருகேந்தர் லால், கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர் (நுகர்வோர் பணிகள்) மருத்துவர். மு. வீரப்பன், குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வு காவல்துறைத் தலைவர் ரூபேஷ் குமார் மீனா மற்றும் வேளாண்மை, உணவுத் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தாம்பரம் தொகுதி பி.எல்.ஏ. ஆலோசனைக் கூட்டம்!

## தொகுதி பார்வையாளர் பரிதி இளம்சுருதி எம்,சி, பங்கேற்பு!

சென்னை, நவ. 19 -

தமிழ்நாடு முதல்வர் கழக தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழிகாட்டுதலின் படி, தாம்பரம் மாநகர செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா தலைமையில், தாம்பரம் தகவல் தொழில்நுட்ப அணி சார்பாக, காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், தாம்பரம் சட்டமன்றத் தொகுதி, தாம்பரம் மேற்கு பகுதிக் குட்பட்ட , BLA2 , வட்டச் செயலாளர், பகுதி செயலாளர்களுடன் சிறப்பு வாக்காளர் திருத்தம் (SIR - Special Intensive Revision) படிவம் விவரங்கள் குறித்த அவசர ஆலோசனை காணொளி நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கழக அயலக அணி மாநிலத் துணைச் செயலாளர் எழும்பூர் சட்டமன்ற தொகுதி 99வது வார்டு மாமன்ற உறுப்பினர் மற்றும் தாம்பரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் பரிதிஇளம் சுருதி கலந்துகொண்டு பாகங்களில் மேற்கொள்ள வேண்டிய பணிகள், BLA-2 பாக நிலை முகவர்கள் தங்களின் சந்தேகங்களை தொகுதி பார்வையாளரிடம் கேட்டறிந்தனர்.

மேலும் இக்கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக கழக அயலக அணி மாநில துணைச் செயலாளர் . கன்னிகை .ஜி.ஸ்டாலின் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினார்.



பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி பம்மல் தெற்கு பகுதியில் மாவட்ட கழகத் துணைச் செயலாளர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ வார்டு வார்டாகச் சென்று பாக முகவர்கள்(BLA2) பாக தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர்கள்(BDA ) 10 பூத் ஒருங்கிணைப்பாளர்கள் ஆகியோர் அடங்கிய ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தி எஸ் ஐ ஆர் கணக்கீட்டு படிவங்களை பூர்த்தி செய்து காட்டி அனைத்து வாக்காளர்களும் படிவங்களைப் பூர்த்தி செய்வதில் உதவி செய்து பணிகளை விரைந்தும் சிறப்பாகவும் செய்யுமாறு கேட்டுக் கொண்டார். அப்பொழுது பகுதி கழகச் செயலாளர் மண்டல தலைவர் வே. கருணாநிதி மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் எல்.பிரபு பகுதி கழக நிர்வாகிகள் வட்டக் கழகச் செயலாளர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.



விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, 128வது வார்டு இந்திரா நகர், காந்தி நகர், ஷேக் அப்துல்லா நகர், சாதிக் பாஷா நகர் ஆகிய பகுதிகளில் சட்டமன்ற உறுப்பினர் பிரபாகர்ராஜா மக்கள் குறைகளை கேட்டறிந்தார். உடன் மாமன்ற உறுப்பினர் ரத்னா லோகேஷ்வரன், வட்ட கழக செயலாளர்கள் மு. கோவிந்தராஜன், வி.ஏ.ராஜா மற்றும் கழக தோழர்கள் கலந்துகொண்டனர்.